**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**
**I.A.No. 11/2026 in O.S. No.597/2025**
**Deposition of Witness for the Plaintiff/Petitioner – DW2**

| | | | |
|---|---|---|---|
| **Name:** | **பூங்கொடி** | **Caste:** | |
| **Husband Name** | **பாலசுந்தரம்** | **தொழில்** | விவசாயம் |
| **Village:** | **கோடங்கிப்பட்டி, தாந்தோணிமலை** | **Religion:** | |
| **Taluk:** | **கரூர்** | **Age :** | 46 |

The Oaths Act 1969 (Act 44/1969) – இன் விதிமுறைகளின் படி 16.04.2026 நாளாகிய இன்று திரு.சி.வேடியப்பன். M.A.,M.L., முதன்மை சார்பு நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் 4 வது பிரதிவாதி ஆவேன். நான் எனக்காவும், 2 வது பிரதிவாதி, 3 வது பிரதிவாதி மற்றும் 5 மற்றும் 6 பிரதிவாதிகள் சார்பாக இம்மனுவில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் வாதி மணி என்பவர் எனது கணவரின் உடன்பிறந்த சகோதரர் ஆவார். வாதி, அசல் வழக்கில் பாகப்பிரிவினை கோரி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி எனக்கு எதிராகவும், மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராகவும் அசல் வழக்கை தாக்கல் செய்திருந்தார். அசல் வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் நானும், வாதி மற்றும் 1 முதல் 3 மற்றும் 5 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளுக்கும் இடையே சமரச உடன்பாடு ஏற்பட்டு, இம்மனுவினை நானும், வாதி மற்றும் 1 முதல் 3 மற்றும் 5 முதல் 8 வரையிலான பிரதிவாதிகளும் இணைந்து தாக்கல் செய்துள்ளோம். இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சமரச மனுவில் உள்ள சரத்துகளின்படி அசல் வழக்கில் சமரச தீர்ப்பாணை பிறப்பிப்பதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை. சமரச மனுவில் குறிப்பிட்டுள்ள சரத்துக்கள் தீர்ப்பாணையின் ஒரு அங்கமான பாவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சமரச மனுவில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் முழுமையாக படித்தும், புரிந்து கொண்டும் கையொப்பம் செய்தேன். நானும், வாதி மற்றும் மற்ற பிரதிவாதிகளும் தாவா சொத்தை சுமூகமாக பிரித்து கொண்டோம். சமரச மனுவில் குறிப்பிட்டுள்ள ஏ அட்டவணை சொத்து 1 வது பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்டது. சமரச மனுவில் குறிப்பிட்டுள்ள பி அட்டவணை சொத்து

7 வது பிரதிவாதி தங்கராஜ், 8 வது பிரதிவாதி வெங்கடேஷ் ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்டது. சமரச மனுவில் குறிப்பிட்டுள்ள சி அட்டவணை சொத்து பொது பாதையாக காண்பிக்கப்பட்டுள்ளது. சமரச மனுவில் உள்ள சரத்துக்களின்படி தாவா சொத்தில் வாதிக்கு கிடைக்கக்கூடிய பங்கிற்கு பதிலாக, தொகை ரூ. 1,00,000 வாதிக்கு கொடுக்கப்பட்டது. அதை அவர் ஏற்றுக்கொண்டார். 2 வதுபிரதிவாதிக்கு தாவா சொத்தில் அவருக்கு கிடைக்கக்கூடிய பங்கிற்கு பதிலாக, ரூ. 25,000 தொகையாக கொடுக்கப்பட்டது. 3 வதுபிரதிவாதிக்கு தாவா சொத்தில் அவருக்கு கிடைக்கக்கூடிய பங்கிற்கு பதிலாக, ரூ. 1,00,000 தொகையாக கொடுக்கப்பட்டது. எனக்கும், 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தில் கிடைக்கக்கூடிய பங்கிற்கு பதிலாக, தலா ரூ. 25,000 தொகையாக கொடுக்கப்பட்டது. 5 மற்றும் 6 பிரதிவாதிகளுக்கு கொடுக்கவேண்டிய தொகை தலா ரூ. 25,000 த்தை (ரூ. 50,000) அவர்களின் தாயாராகிய நான் 1 வது பிரதிவாதியிடமிருந்து பெற்றுக்கொண்டேன். ஆக மொத்தம் ரூ. 75,000 த்தை 1 வதுபிரதிவாதியிடமிருந்து பெற்றுக்கொண்டேன். மேற்படியான சங்கதிகளை ஒப்புக்கொண்டுதான் நானும், வாதி மற்றும் 1 முதல் 3 மற்றும் 5 முதல் 8 வரையிலான பிரதிவாதிகள் சமரச மனுவில் கையொப்பம் செய்தோம். ஆகவே, சமரசமனுவின் படி அசல் வழக்கில் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். என்னுடைய ஆதார் அட்டையின் நகலை தாக்கல் செய்கிறேன். அந்த ஆதார் அட்டையின் நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டு எ.ம.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.